கர்நாடக அரசு

செம்மொழித் தமிழ்

முதல் மொழி

CHEMMOZHI THAMIZH

FIRST LANGUAGE TAMIL

Part-1

2

ஆம் வகுப்பு

STANDARD

@KTBS NOT TO BE REPUBLISHED

KARNATAKA TEXT BOOK SOCIETY (R.)
6th Cross, Malleshwaram
Bangalore - 560 003.

Preface

The Textbook Society, Karnataka has been engaged in producing new textbooks according to the new syllabi which in turn are designed on NCF – 2005 since June 2010. Textbooks are prepared in 12 languages; seven of them serve as the media of instruction. From standard 1 to 4 there is the EVS, mathematics and 5th to 10th there are three core subjects namely mathematics, science and social science.

NCF – 2005 has a number of special features and they are:

- connecting knowledge to life activities
- learning to shift from rote methods
- enriching the curriculum beyond textbooks
- learning experiences for the construction of knowledge
- making examinations flexible and integrating them with classroom experiences
- caring concerns within the democratic policy of the country
- making education relevant to the present and future needs.
- softening the subject boundaries- integrated knowledge and the joy of learning.
- the child is the constructor of knowledge

The new books are produced based on three fundamental approaches namely.

Constructive approach, Spiral Approach and Integrated approach

The learner is encouraged to think, engage in activities, master skills and competencies. The materials presented in these books are integrated with values. The new books are not examination oriented in their nature. On the other hand they help the learner in the all round development of his/her personality, thus help him/her become a healthy member of a healthy society and a productive citizen of this great country, India.

The most important objectives of teaching language are listening, speaking, reading, writing and reference work. These skills have been given a lot of importance in all the language textbooks. Along with the inculcation of these skills, fundamental grammar, opportunities for learners to appreciate beauty and imbibe universal life values have been integrated in language textbooks. When learners master these competencies, they would stop studying textbooks for the sake of passing examinations. In order to help learners master these competencies, a number of paired and group activities, assignments and project work have been included in the textbooks. It is expected that these activities would help learner master communicative skills. Ultimately, it is expected that students master the art of learning to learn and make use of these competencies in real life.

The Textbook Society expresses grateful thanks to the chairpersons, writers, scrutinisers, artists, staff of DIETs and CTEs and the members of the Editorial Board and printers in helping the Text Book Society in producing these textbooks. A few works of some writers and poets have been included in these textbooks. The textbook society is extremely grateful to them for giving their consent for the inclusion of these pieces in the textbooks.

Nagendra Kumar
Managing Director
Karnataka Textbook Society®
Bengaluru, Karnataka

Prof .G .S .Mudambadithaya
Coordinator
Curriculum Revision and Textbook Preparation
Karnataka Textbook Society®
Bengaluru, Karnataka

NOT TO BE REPUBLISHED © KTBS

முன்னுரை

ஒருவர் தம் எண்ணங்களையும் கருத்துக்களையும் வெளிப்படுத்த மொழி மிகவும் இன்றியமையாதது. குழந்தை முதன் முதலில் தாயின் வழியாகவும் பின்னர், சமூகத்தின் வழியாகவும் மொழி அறிவைப்பெற்று, மொழியை உயிர்ப்போடு வெளியிடத் தொடங்குகிறது. மொழி ஒரு வலுவான ஊடகமாகும்.

தற்போதைய பாடத்திட்டம் அமைக்கும் பொழுது மாநிலப்பாடத்திட்டங்கள் 2001-02 மற்றும் என்.சி.எப் 2005, இவ்விரண்டையும் ஒப்பிட்டுப் பாடத்திட்டம் மேன்மைப் படுத்தப்பட்டுள்ளது. அடிப்படையில் குறைந்த கற்றல் அளவுடன் கூடிய திறன்கள் என்.சி.எப் 2005 பாடத்திட்டத்தினை ஒப்பிட்டு உள்ளுறை செம்மைப்படுத்தப் பட்டுள்ளது. பாடத்திட்டம் குழந்தையின் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றின் அடிப்படையில் செயல்திறன் மற்றும் தொடர்புப்பணி போன்றவற்றை உள்ளடக்கி இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. எளிமையிலிருந்து கடினத்திற்குச் செல்லுமாறு பாடப்பொருள் அமைக்கப்பட்டுள்ளது தேசியக் கல்வித்திட்டம் 1986இல் குறிப்பிட்டுள்ளபடி குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்குத் தேவையான கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பாடமும் ஒரு திறனை முன்நிறுத்தி அமைக்கப்பட்டுள்ளது. மொழிப்பாடத்துக்கு ஏற்பத் தனிச் சிறப்பாகப் பல திறன்கள் உள்ளடங்கி உள்ளன. மாறுபட்ட கோணத்தில் எழுதப்பட்ட கதைகளும், படங்களும், குழந்தைகளின் கற்பனைத்திறனை வளர்க்கும். பயிற்சிப் பகுதியுடன் குறிப்பேட்டில் எழுதச் செய்வதால் குழந்தைகளின் எழுத்தைச் செம்மைப்படுத்தும்.

கற்றல் சுவையாக இருந்தால்தான் கல்வியும் சுவையாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு கற்றல் குழந்தைக்கு சுவையாகத் தோன்றும் வண்ணம் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

பாடநூலை உயரிய நோக்கத்தில் உருவாக்கி இருப்பினும் அதனை வகுப்பறையில் செயல்படுத்திக் கற்பிப்போர் நம் ஆசிரியப் பெருமக்களே. இந்நூல் உருவாக்கப்பட்டதன் நோக்கத்தையும், எதிர்பார்ப்பையும் நன்குணர்ந்து செயலாற்றுவார்கள் என்று நம்புகிறோம். வருங்காலத் தலைமுறையை உருவாக்கும் ஆசிரியப்பெருமக்களின் ஒத்துழைப்பும், கற்பிக்கும் திறனும் எங்கள் பணி வெற்றி பெற முதன்மையானவை என நம்புகிறோம்.

இப்பாட நூல் நன்கு உருவாக ஒத்துழைப்பு அளித்த கருநாடக அரசுக்கல்வித் துறையினருக்கும் இப்பாடநூலை மேற்பார்வையிட்டு செம்மைப்படுத்திய எங்கள் பெருமதிப்பிற்குரிய பேராசிரியர் திருவாளர் தா. கிருட்டின மூர்த்தி அவர்களுக்கும் பெங்களூர் தமிழ்ச்சங்க நூலகத்தைப் பயன்படுத்தி நூலின் ஆக்கத்திற்குத் துணை புரிந்த சங்க நிர்வாகிகளுக்கும் எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்புடன்

C. ராமமூர்த்தி

© KTBS NOT TO BE REPUBLISHED

TEXT BOOK COMMITTEE

Chairperson :

1) **Sri C. Ramamoorthy,** Tamil Teacher, BBMP Boys High School, Jogupalya, Halasooru, Bengaluru-08.

Members :

1) **Sri A. Muniraj,** Tamil Teacher, BBMP Girls High School, Cleveland Town, Bengaluru.
2) **Smt. Inbarasi,** Tamil Teacher, Cleveland Town, Bengalurue-5.
3) **Smt. V. Sarala,** Teacher, BBMP Girls P.V. College, Jogupalya, Halasuru, Bengaluru-46.
4) **Sri Krishnamurthy,** Lecturer, RBANM'S FGC, 12, Annasamy Mudaliyar Road, Bengaluru-42.

Artist

Sri M. Channappa, Drawing Teacher, Govt. High School, Chickpet, Rajitha Complex, Bengaluru.

Scrutinizer :

Sri D. Krishnamurthy, Professor (Rtd) Maharani Arts College, Bengaluru-01

Chief Co-ordinator :

Prof. G.S. Mudambadithaya, Co-ordinator, Curriculum revision and text book preparation, Karnataka Textbook Society (R), Bengaluru.

Chief Advisers :

Sri Nagendra Kumar, Managing Director, Karnataka Textbook Society (R), Bengaluru.

Sri Panduranga, Deputy Director (incharge), Karnataka Textbook Society (R), Bengaluru.

Programme Co-ordinator :

Smt. Chandrakala, ADPI, Karnataka Textbook Society (R), Bengaluru.

@KTBS NOT TO BE REPUBLISHED

ಪರಿಷ್ಕರಣೆ ಕುರಿತು

ಒಂದರಿಂದ ಹತ್ತನೇ ತರಗತಿಯ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಬಗ್ಗೆ ಪ್ರಕಟಗೊಂಡ ಸಾರ್ವಜನಿಕ ಅಭಿಪ್ರಾಯಗಳನ್ನು ಗಮನಿಸಿ ಮಾನ್ಯ ಮುಖ್ಯಮಂತ್ರಿಯವರೂ ಅರ್ಥಸಚಿವರೂ ಆಗಿರುವ ಶ್ರೀ ಸಿದ್ದರಾಮಯ್ಯನವರು ತಮ್ಮ 2014–15 ರ ಬಜೆಟ್‌ನಲ್ಲಿ ತಜ್ಞರ ಸಮಿತಿಯನ್ನು ರಚಿಸುವ ಘೋಷಣೆ ಮಾಡಿದರು. ತಜ್ಞರು ಅನುಸರಿಸಬೇಕಾದ ಮೂಲ ಆಶಯವನ್ನು ಹೀಗೆ ಹೇಳಿದರು: "ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಸಾಮಾಜಿಕ ಸಾಮರಸ್ಯ, ನೈತಿಕಮೌಲ್ಯಗಳು, ವ್ಯಕ್ತಿತ್ವವಿಕಸನ, ವೈಜ್ಞಾನಿಕ ಮತ್ತು ವೈಚಾರಿಕ ಮನೋಭಾವ, ಜಾತ್ಯತೀತತೆ ಮತ್ತು ರಾಷ್ಟ್ರಿಯ ಬದ್ಧತೆಗಳಿಗೆ ಅನುವಾಗುವಂತೆ ತಜ್ಞರ ಸಮಿತಿಯನ್ನು ಪುನರ್ ರಚಿಸಲಾಗುವುದು" – ಇದು ಬಜೆಟ್ ಭಾಷಣದಲ್ಲಿ ಸಾದರಪಡಿಸಿದ ಆಶಯ.

ಆನಂತರ ಶಿಕ್ಷಣ ಇಲಾಖೆಯು ಒಂದರಿಂದ ಹತ್ತನೇ ತರಗತಿಯವರೆಗಿನ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಪರಿಷ್ಕರಣೆಗಾಗಿ 27 ಸಮಿತಿಗಳನ್ನು ರಚಿಸಿ ದಿನಾಂಕ: 24.11.2014 ರಂದು ಆದೇಶಹೊರಡಿಸಿತು. ಈ ಸಮಿತಿಗಳು ವಿಷಯವಾರು ಮತ್ತು ತರಗತಿವಾರು ಮಾನದಂಡಕ್ಕನುಗುಣವಾಗಿ ರಚಿತವಾದವು. ವಿವಿಧ ಪಠ್ಯವಿಷಯಗಳಿಗೆ ಸಂಬಂಧಿಸಿದ ತಜ್ಞರು, ಅಧ್ಯಾಪಕರು ಈ ಸಮಿತಿಗಳಲ್ಲಿದ್ದಾರೆ. ಈಗಾಗಲೇ ಲಿಖಿತವಾಗಿ ಬಂದಿರುವ ಅನೇಕ ಆಕ್ಷೇಪಗಳು ಮತ್ತು ವಿಶ್ಲೇಷಣೆಗಳನ್ನು ಪರಿಶೀಲಿಸಿ, ತಪ್ಪು ಒಪ್ಪುಗಳ ಬಗ್ಗೆ ನಿರ್ಣಯಿಸಿ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಪರಿಷ್ಕರಿಸುವ ಹೊಣೆಹೊತ್ತ ಈ ಸಮಿತಿಗಳಿಗೆ 'ಅಗತ್ಯವಿದ್ದಲ್ಲಿ ಪಠ್ಯವಸ್ತುವನ್ನು ಪರಿಷ್ಕರಿಸಿ ನಂತರ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಪರಿಷ್ಕರಿಸುವ' ಸ್ವಾತಂತ್ರ್ಯವನ್ನು 24.11.2014ರ ಆದೇಶದಲ್ಲೇ ನೀಡಲಾಗಿತ್ತು. ಆನಂತರ 19.09.2015 ರಂದು ಹೊಸ ಆದೇಶ ಹೊರಡಿಸಿ 'ಅಗತ್ಯವಿದ್ದಲ್ಲಿ ಪುನರ್ ರಚಿಸುವ' ಸ್ವಾತಂತ್ರ್ಯವನ್ನು ನೀಡಲಾಯಿತು. ಹೀಗೆ ಸಮಗ್ರ ಪರಿಷ್ಕರಣೆಗೊಂಡ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು 2016–17 ರ ಬದಲು 2017–18ನೇ ಶೈಕ್ಷಣಿಕ ವರ್ಷದಲ್ಲಿ ಜಾರಿಗೊಳಿಸಲಾಗುವುದೆಂದು ಇದೇ ಆದೇಶದಲ್ಲಿ ತಿಳಿಸಲಾಯಿತು.

ಅನೇಕ ವ್ಯಕ್ತಿಗಳೂ ಸಂಘಟನೆಗಳೂ ಸ್ವಯಂಪ್ರೇರಿತರಾಗಿ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಮಾಹಿತಿದೋಷ, ಆಶಯದೋಷಗಳನ್ನು ಪಟ್ಟಿಮಾಡಿ ಶಿಕ್ಷಣ ಸಚಿವರಿಗೆ, ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘಕ್ಕೆ ಕಳುಹಿಸಿದ್ದರು. ಅವುಗಳ ಪರಿಶೀಲನೆಮಾಡಿದ್ದಲ್ಲದೆ, ಸಮಿತಿಗಳಾಚೆಗೆ ಅನೇಕ ಸಂವಾದಗಳನ್ನು ಏರ್ಪಡಿಸಿ ವಿಚಾರ ವಿನಿಮಯ ಮಾಡಿಕೊಂಡಿದ್ದೇವೆ. ಪ್ರಾಥಮಿಕ ಮತ್ತು ಪ್ರೌಢಶಾಲಾ ಅಧ್ಯಾಪಕರ ಸಂಘಗಳ ಜೊತೆ ಚರ್ಚಿಸಿದ್ದಲ್ಲದೆ ಪ್ರಶ್ನಾವಳಿ ಸಿದ್ಧಪಡಿಸಿ ಅಧ್ಯಾಪಕರಿಗೆ ಕಳಿಸಿ ಅಭಿಪ್ರಾಯಗಳನ್ನು ಸಂಗ್ರಹಿಸಲಾಗಿದೆ. ಅಧ್ಯಾಪಕರು, ವಿಷಯಪರಿವೀಕ್ಷಕರು ಮತ್ತು ಡಯಟ್ ಪ್ರಾಂಶುಪಾಲರ ಪ್ರತ್ಯೇಕ ಸಭೆಗಳನ್ನು ನಡೆಸಿ ವಿಶ್ಲೇಷಣಾತ್ಮಕ ಅಭಿಮತಗಳನ್ನು ಪಡೆಯಲಾಗಿದೆ. ವಿಜ್ಞಾನ, ಸಮಾಜವಿಜ್ಞಾನ, ಗಣಿತ, ಭಾಷೆ ಸಾಹಿತ್ಯಗಳಿಗೆ ಸಂಬಂಧಿಸಿದ ತಜ್ಞರಿಗೆ ಮೊದಲೇ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಕಳುಹಿಸಿ ಆನಂತರ ಸಭೆ ನಡೆಸಿ ಚರ್ಚಿಸಲಾಗಿದೆ. ಮಹಿಳಾ ಸಂಘಟನೆ ಹಾಗೂ ವಿಜ್ಞಾನ ಸಂಬಂಧಿ ಸಂಸ್ಥೆಗಳನ್ನು ಆಹ್ವಾನಿಸಿ ಚಿಂತನೆ ನಡೆಸಲಾಗಿದೆ. ಹೀಗೆ ಎಲ್ಲಾ ಮೂಲಗಳಿಂದ ಪಡೆದ ಅರಿವಿನ ಆಧಾರದ ಮೇಲೆ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಅಗತ್ಯವಿದ್ದಕಡೆ ಪರಿಷ್ಕರಿಸಲಾಗಿದೆ.

ಬಹುಮುಖ್ಯವಾದ ಇನ್ನೊಂದು ಸಂಗತಿಯನ್ನು ಇಲ್ಲಿ ಹೇಳಬೇಕು. ಕೇಂದ್ರೀಯ ಶಾಲಾ (N.C.E.R.T) ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಜೊತೆ ರಾಜ್ಯದ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ತೌಲನಿಕವಾಗಿ ಅಧ್ಯಯನ

©KTBS NOT TO BE REPUBLISHED

ಮಾಡಿ ಸಲಹೆಗಳನ್ನು ನೀಡಲು ವಿಜ್ಞಾನ, ಗಣಿತ ಮತ್ತು ಸಮಾಜವಿಜ್ಞಾನಕ್ಕೆ ಸಂಬಂಧಿಸಿದಂತೆ ತಜ್ಞರ ಮೂರು ಸಮಿತಿಗಳನ್ನು ರಚಿಸಲಾಯಿತು. ಈ ಸಮಿತಿಗಳು ನೀಡಿದ ತೌಲನಿಕ ವಿಶ್ಲೇಷಣೆ ಮತ್ತು ಸಲಹೆಗಳನ್ನು ಆಧರಿಸಿ ರಾಜ್ಯ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಗುಣಮಟ್ಟವನ್ನು ಹೆಚ್ಚಿಸಲಾಗಿದೆ. ಕೇಂದ್ರೀಯ ಶಾಲಾ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳಿಗಿಂತ ನಮ್ಮ ರಾಜ್ಯದ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಗುಣಮಟ್ಟ ಕಡಿಮೆಯಾಗದಂತೆ ಕಾಯ್ದುಕೊಳ್ಳಲಾಗಿದೆ. ಜೊತೆಗೆ ಆಂಧ್ರ, ತಮಿಳುನಾಡು, ಮಹಾರಾಷ್ಟ್ರಗಳ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಜೊತೆ ನಮ್ಮ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಪರಿಶೀಲಿಸಲಾಗಿದೆ.

ಇನ್ನೊಂದು ಸ್ಪಷ್ಟನೆಯನ್ನು ನೀಡಲು ಬಯಸುತ್ತೇನೆ. ನಮ್ಮ ಸಮಿತಿಗಳು ಮಾಡಿರುವುದು ಪರಿಷ್ಕರಣೆಯೇ ಹೊರತು ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಸಮಗ್ರ ರಚನೆಯಲ್ಲ. ಆದ್ದರಿಂದ ಈಗಾಗಲೇ ರಚಿತವಾಗಿರುವ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಸ್ವರೂಪಕ್ಕೆ ಎಲ್ಲಿಯೂ ಧಕ್ಕೆಯುಂಟುಮಾಡಿಲ್ಲ. ಲಿಂಗತ್ವ ಸಮಾನತೆ, ಪ್ರಾದೇಶಿಕ ಪ್ರಾತಿನಿಧ್ಯ, ರಾಷ್ಟ್ರೀಯ ಸಮಗ್ರತೆ, ಸಮಾನತೆ, ಸಾಮಾಜಿಕ ಸಾಮರಸ್ಯಗಳ ಹಿನ್ನೆಲೆಯಲ್ಲಿ ಕೆಲವು ಪರಿಷ್ಕರಣೆಗಳು ನಡೆದಿವೆ. ಹೀಗೆ ಪರಿಷ್ಕರಿಸುವಾಗ ರಾಷ್ಟ್ರೀಯ ಪಠ್ಯಕ್ರಮ ಚೌಕಟ್ಟು ಮತ್ತು ರಾಜ್ಯ ಪಠ್ಯಕ್ರಮ ಚೌಕಟ್ಟುಗಳನ್ನು ಮೀರಿಲ್ಲವೆಂದು ತಿಳಿಸಬಯಸುತ್ತೇನೆ: ಜೊತೆಗೆ ನಮ್ಮ ಸಂವಿಧಾನದ ಆಶಯಗಳನ್ನು ಅನುಸರಿಸಲಾಗಿದೆ. ಸಮಿತಿಗಳು ಮಾಡಿದ ಪರಿಷ್ಕರಣೆಯನ್ನು ಮತ್ತೊಮ್ಮೆ ಪರಿಶೀಲಿಸಲು ವಿಷಯವಾರು ಉನ್ನತ ಪರಿಶೀಲನ ಸಮಿತಿಗಳನ್ನು ರಚಿಸಿ ಅಭಿಪ್ರಾಯಪಡೆದು ಅಳವಡಿಸಲಾಗಿದೆ.

ಹೀಗೆ ಕ್ರಮಬದ್ಧವಾಗಿ ನಡೆದ ಕೆಲಸಕ್ಕೆ ತಮ್ಮನ್ನು ತಾವು ಸಂಪೂರ್ಣ ತೊಡಗಿಸಿಕೊಂಡ 27 ಸಮಿತಿಗಳ ಅಧ್ಯಕ್ಷರು ಮತ್ತು ಸದಸ್ಯರನ್ನು ಹಾಗೂ ಉನ್ನತ ಪರಿಶೀಲನಾ ಸಮಿತಿಯ ಸಮಸ್ತರನ್ನು ಕೃತಜ್ಞತೆಯಿಂದ ನೆನೆಯುತ್ತೇವೆ. ಅಂತೆಯೇ ಸಮಿತಿಗಳ ಕೆಲಸ ಸುಗಮವಾಗಿ ನಡೆಯುವಂತೆ ವ್ಯವಸ್ಥೆಮಾಡಲು ಕಾರ್ಯಕ್ರಮ ಅಧಿಕಾರಿಗಳಾಗಿ ನಿಷ್ಠೆಯಿಂದ ದುಡಿದ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘದ ಎಲ್ಲಾ ಅಧಿಕಾರಿಗಳನ್ನೂ ನೆನೆಯುತ್ತೇವೆ. ಸಹಕರಿಸಿದ ಸಿಬ್ಬಂದಿಗೂ ನಮ್ಮ ವಂದನೆಗಳು. ಅಭಿಪ್ರಾಯ ನೀಡಿ ಸಹಕರಿಸಿದ ಸರ್ವ ಸಂಘಟನೆಗಳು ಮತ್ತು ತಜ್ಞರಿಗೆ ಧನ್ಯವಾದಗಳು.

ಶ್ರೀ ಎಂ. ಪಿ. ಮಾದೇಗೌಡ.
ವ್ಯವಸ್ಥಾಪಕ ನಿರ್ದೇಶಕರು
ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ (ರಿ.)
ಬೆಂಗಳೂರು

ಪ್ರೊ. ಬರಗೂರು ರಾಮಚಂದ್ರಪ್ಪ
ಸರ್ವಾಧ್ಯಕ್ಷರು
ಪಠ್ಯಪುಸ್ತಕ ಪರಿಷ್ಕರಣ ಸಮಿತಿ
ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ (ರಿ)
ಬೆಂಗಳೂರು

© KTBS NOT TO BE REPUBLISHED

ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಪರಿಷ್ಕರಣ ಸಮಿತಿಗಳ ವಿವರ

ಸರ್ವಾಧ್ಯಕ್ಷರು

ಪ್ರೊ. ಬರಗೂರು ರಾಮಚಂದ್ರಪ್ಪ ರಾಜ್ಯ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಮಿತಿ, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ(ರಿ) ಬೆಂಗಳೂರು–85

ಪರಿಷ್ಕರಣ ಸಮಿತಿ

ಅಧ್ಯಕ್ಷರು

ಡಾ. ಸುಧಾಕರ, ನಿವೃತ್ತ ತಮಿಳು ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, ಪ್ರಥಮದರ್ಜೆ ಕಾಲೇಜು, ಉರಿಗಾಂ, ಕೆ.ಜಿ.ಎಫ್.

ಸದಸ್ಯರು

ಶ್ರೀ. ಆಶೀರ್ವಾದಂ, ಸ. ಶಿ, ಬೆಂಗಳೂರು ತಮಿಳು ಸಂಘಂ ಕಾಮರಾಜರ ಪ್ರೌಢಶಾಲೆ, ಬೆಂಗಳೂರು.

ಶ್ರೀ. ಬಾಬು, SVCK ಪ್ರೌಢಶಾಲೆ, 2ನೇ ಮುಖ್ಯರಸ್ತೆ, ತ್ಯಾಗರಾಜ ನಗರ, ಬೆಂಗಳೂರು.

ಶ್ರೀಮತಿ. ಅಮುದ, ಉಪನ್ಯಾಸಕರು, ಜಿ.ಸಿ.ಸಿ.ಡಬ್ಲ್ಯು ಕಾಲೇಜು, ಫ್ರೇಜರ್‌ಟೌನ್, ಶಿವಾಜಿನಗರ, ಬೆಂಗಳೂರು.

ಶ್ರೀಮತಿ. ಕಾತ್ಯಾಯಿನಿ, ಸಹ ಶಿಕ್ಷಕರು, ಆಲ್ಫಾನ್ಸ್ ಹೈಸ್ಕೂಲ್, ಡೇವಿಸ್‌ರೋಡ್, ಥಾಮಸ್‌ಟೌನ್, ಬೆಂಗಳೂರು.

ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಉನ್ನತ ಸಮಿತಿ ತಜ್ಞರುಗಳು

ಡಾ. ಕಾರ್ಲ್ಲಾಸ್, ನಿವೃತ್ತ ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, 253, 1ನೇ ಅಡ್ಡರಸ್ತೆ, 2ನೇ ಬ್ಲಾಕ್, ಬನಶಂಕರಿ 3ನೇ ಹಂತ (ಕತ್ರಿಗುಪ್ಪೆ), ಜನತಾಬಜಾರ್, ಬೆಂಗಳೂರು.

ಡಾ. ಲಿಂಡಾಕ್ರಿಸ್ಟ್, ನಿವೃತ್ತ ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, 253, 1ನೇ ಅಡ್ಡರಸ್ತೆ, 2ನೇ ಬ್ಲಾಕ್, ಬನಶಂಕರಿ 3ನೇ ಹಂತ (ಕತ್ರಿಗುಪ್ಪೆ), ಜನತಾಬಜಾರ್, ಬೆಂಗಳೂರು.

ಪ್ರೊ. ಸೀತಾ, ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, ಸೆಂಟ್ ಫಿಲೋಮಿನಾ ಕಾಲೇಜು, ಬನ್ನಿಮಂಟಪ, ಮೈಸೂರು–ಬೆಂಗಳೂರು ರಸ್ತೆ ಮೈಸೂರು.

ಸಲಹೆ ಮತ್ತು ಮಾರ್ಗದರ್ಶನ:

ಶ್ರೀ ಎಂ. ಪಿ. ಮಾದೇಗೌಡ., : ವ್ಯವಸ್ಥಾಪಕ ನಿರ್ದೇಶಕರು, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ (ರಿ.), ಬೆಂಗಳೂರು.

ಶ್ರೀಮತಿ ಎಂ. ಡಿ. ಉಷಾ., ಉಪನಿರ್ದೇಶಕರು, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ (ರಿ.), ಬೆಂಗಳೂರು.

ಕಾರ್ಯಕ್ರಮ ಸಂಯೋಜಕರು :

ಶ್ರೀ ಶಂಕರೇ ಗೌಡ ಎಲ್. : ಸಹಾಯಕ ನಿರ್ದೇಶಕರು, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ (ರಿ.), ಬೆಂಗಳೂರು.

© KTBS NOT TO BE REPUBLISHED

பொருளடக்கம்

வரிசை எண்	பாடங்களின் பெயர்கள்	பக்கம்
1	நமது கொடி (பாடல்)	2
2	படக்கதை	8
3	மீள்பார்வை	13
4	பேராசை பெருநட்டம்	25
5	சிற்றூர் (பாடல்)	33
6	முதலையா ? நரியா ?	38
7	மேகம் (பாடல்)	45
8	மோர் முப்பேர் பெற்றது	48
9	நெருப்புக் கோழி (பாடல்)	53
10	குயில் (உரையாடல்)	58
11	மேகம் கீழே விழுகிறது ஓடுங்கள்	66
12	உடல் நலம் பேணல் (பாடல்)	74

@KTBS NOT TO BE REPUBLISHED

வண்ணமிடுக



@KTBS
NOT TO BE REPUBLISHED

1. நமது கொடி

I5X2E2

வண்ணங்கள் காட்டுது, நமது கொடி
வானத்தை முட்டுது, நமது கொடி
எண்ணங்கள் ஊட்டுது, நமது கொடி
என்னென்ன காட்டுது, நமது கொடி ?

தீரத்தைக் காட்டுது, சிவப்பு நிறம்.
தியாகத்தைக் காட்டுது, சிவப்பு நிறம்
வீரத்தைக் காட்டுது, சிவப்பு நிறம்
வெற்றியைக் காட்டுது, சிவப்பு நிறம்.

ஒளியினைக் காட்டுது, வெள்ளை நிறம்.
உண்மையைக் காட்டுது , வெள்ளை நிறம்
தெளிவினைக் காட்டுது, வெள்ளை நிறம்
சிறப்பையும் காட்டுது, வெள்ளை நிறம்

வளமையைக் காட்டுது, பச்சை நிறம்
வறுமையை ஓட்டுது, பச்சை நிறம்
குளுமையைக் காட்டுது, பச்சை நிறம்
குறையெல்லாம் ஓட்டுது, பச்சை நிறம்

சத்தியம் காட்டிடும் கொடி நடுவே
தருமத்தின் சின்னமாம் சக்கரமே !
நித்தியம் சுற்றிடும் நில்லாமலே
நீதியை நாட்டிடும் சக்கரமே !

குழந்தைக் கவிஞர் - அழ. வள்ளியப்பா

NOT TO BE REPUBLISHED ©KTBS

பயிற்சி

அ. வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடை எழுதுக.

1. நமது கொடி எத்தனை வண்ணங்கள் உடையது ?

____

____

2. தீரத்தைக் காட்டுவது எந்த நிறம் ?

____

____

3. உண்மையைக் காட்டுவது எந்த நிறம் ?

____

____

4. வளமையைக் காட்டுவது எந்த நிறம் ?

____

____

5. தருமத்தின் சின்னம் எது ?

____

____

ஆ. கோடிட்ட இடங்களை நிரப்புக :-

1. வண்ணங்கள் காட்டுது ____________ கொடி.
2. வீரத்தைக் காட்டுவது ____________ நிறம்.
3. தெளிவினைக் காட்டுவது ____________ நிறம்.

@KTBS NOT TO BE REPUBLISHED

4. வறுமையை ஓட்டுவது .... நிறம்

5. நீதியை நாட்டிடும் ....

இ. பொருத்தி எழுதுக.

1.	பச்சை நிறம்	வீரம்	______________
2.	சிவப்பு நிறம்	பசுமை	______________
3.	வெண்மை நிறம்	தருமம்	______________
4.	அசோக சக்கரம்	உண்மை	______________
5.	நீல நிறம்	நேர்மை	______________
		சக்கரம்	______________

இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள்



______________ ______________ ______________

______________ ______________ ______________

உங்கள் ஆசிரியரைக் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்

@KTBS NOT TO BE REPUBLISHED

எழுதிப் பழகுக

ஈ. வண்ணங்கள் காட்டுது நமது கொடி

தீரத்தைக் காட்டுது சிவப்பு நிறம்

தருமத்தின் சின்னமாம் சக்கரமே

@KTBS NOT TO BE REPUBLISHED

நமது தேசியக் கொடியை வரைவோமா ?



@KTBS
NOT TO BE REPUBLISHED

ஆடிப்பாடி மகிழ்வோம்



©KTBS NOT TO BE REPUBLISHED

படத்திலுள்ள குழந்தைள் என்ன செய்கிறார்கள் என்பதை குழந்தைகளோடு உரையாடவும்.
படத்தைப்பார்த்து காணும் காட்சிகளை விவரித்துக் கூறவும்

2. படக் கதை

P2N6G4

படம் பார்த்து கதை சொல்க:





எது அறம் ?

@KTBS NOT TO BE REPUBLISHED

படம் பார்த்து கதை சொல்க :

NOT TO BE REPUBLISHED

நீதி : காலத்தால் செய்யும் உதவி மிகப் பெரியது.

படம் பார்த்து கதை சொல்க :







நீதி : உபாயம் அறிந்தவனுக்கு அபாயம் இல்லை.

©KTBS
NOT TO BE REPUBLISHED

படம் பார்த்து கதை சொல்க.





நீதி : ஒற்றுமையின்மை மற்றவருக்கு இலாபம்

©KTBS NOT TO BE REPUBLISHED

வண்ணம் தீட்டுக.



@KTBS
NOT TO BE REPUBLISHED

புள்ளிகளை இணைத்து வண்ணம் தீட்டுக.

3. மீன் பார்வை

ஒலிப்புப் பயிற்சி

R5G9B7



@KTBS
NOT TO BE REPUBLISHED

தமிழ் எழுத்துகள் - எழுத்துப் பயிற்சி

உயிர் எழுத்துக்கள்

அ	ஆ	இ	ஈ	உ
ஊ	எ	ஏ	ஐ	ஒ
ஓ	ஔ	உயிர் எழுத்துகள் 12 ஆய்த எழுத்து 1		ஃ

மெய் எழுத்துக்கள்

க்	ங்	ச்	ஞ்	ட்
ண்	த்	ந்	ப்	ம்
ய்	ர்	ல்	வ்	ழ்
ள்	ற்	ன்	மெய் எழுத்துகள் 18	

@KTBS
NOT TO BE REPUBLISHED

மீள் பார்வை

அ. உயிர் எழுத்துக்கள் :

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ

ஆ. உயிர் எழுத்து வரிசையில் சொற்களை எழுதுக.

அம்மா	எறும்பு
ஆடு	ஏற்றம்
இதழ்	ஐவர்
ஈசல்	ஒட்டகம்
உப்பு	ஓட்டம்
ஊதல்	ஔடதம்

NOT TO BE REPUBLISHED @KTBS

இ. மெய்யெழுத்துக்கள் :

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்

ஈ. மெய்யெழுத்துக்கள் வரிசையில் சொற்களை எழுதுக.

தக்காளி, தங்கம், தச்சர், தஞ்சம், தட்டு, தண்ணீர், தத்து, தந்தி, தப்பு, தம்பி, தாய், தயிர், தகவல், தவ்வி, தமிழ், தள்ளி விடு, தற்செயல், தன்மை.

உ. உயிர் மெய்யெழுத்துக்கள் :

1. க்+அ = க, கா, கி, கீ, கு, கூ, கெ, கே, கை, கொ, கோ, கௌ

முதல் ஔ வரை வரும் உயிர்மெய் எழுத்துகள்

2. ம் + அ...... ம, மா, மி, மீ, மு, மூ, மெ, மே, மை, மொ, மோ, மௌ.

ஊ. உயிர் மெய்யெழுத்து வரிசையில் சொற்களை எழுதுக.

கடிதம்	குதிரை	கைப்பிடி
காவல்	கூட்டம்	கொட்டை
கிளை	கெடிகாரம்	கோட்டை
கீரி	கேள்வி	கௌதாரி

@KTBS NOT TO BE REPUBLISHED

எ. வரிசைப் படுத்தி எழுதுக :

1. இ, உ, எ, ஓ, ஊ, ஒ, அ, ஈ, ஐ, ஏ, ஔ, ஆ.
2. ச், ப், க், ட், ற், த் (வல்லினம்)
3. ஞ், ங், ந், ண், ம், ன் (மெல்லினம்)
4. ய், ல், ர், ழ், வ், ள் (இடையினம்)
5. ய, யி, யா, யு, யீ, யெ, யூ, யொ, யே, யை, யௌ, யோ. (ய வர்க்கம்)

ஏ. விடுபட்ட எழுத்துக்களை எழுதவும்.

அ____ல்	ஐ____ர்	த____கம்	கோ____ல்
ஆல____ம்	ஒட்____கம்	கா____ம்	சம____
இ____	ஓணா____	கம____ம்	ஞா-ம்
ஈச____	ஔட____ம்	கி____	வா____ம்
உ____ல்	ப____ம்	கு____ம்	குள____
ஊ____ல்	பட்____ம்	ச____ம்	வேத____
எ____	பழ____	ம____ம்	வே____ம்
ஏ____	பண____	தகவ____	த____ழ்

ஐ. கட்டத்தில் உள்ள எழுத்துக்களை இணைத்து வார்த்தைகள் அமைக்கவும்.

ப	ட	கு	க	தூ
எ	லி	சீ	ம	ண்
ரு	சா	ப்	ப	டி
து	வி	பு	வா	ல்
நா	ற்	கா	லி	ள்

1. படகு
2. ____________
3. ____________
4. ____________
5. ____________
6. ____________
7. ____________
8. ____________
9. ____________
10. ____________
11. ____________
12. ____________
13. ____________
14. ____________

@KTBS
NOT TO BE REPUBLISHED

ஒ. குறுக்கெழுத்து விளையாட்டு

		தே		
				பொ
வெ	ங்	கா	ய	
ள்		ய்		மை
ள				
க்				
கா				
ய்				

தேங்காய்

____

____

____

____

____

@KTBS
NOT TO BE REPUBLISHED

ஓ. மாறியுள்ள எழுத்துக்களை வரிசைப்படுத்தி எழுதுக.

ப	ல்	ப்	க		-	கா	ய்	தே	ங்	________
ர	ம்	ம்	ப	ப	-	ன்	வே	ட		________
ன்	ப	றி			-	சீ	பு	ப்		________

ஔ. கோடிட்ட இடங்களில் அடைப்புக்குள் உள்ள எழுத்துக்களைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்கி எழுதுக :

.... டல்	பா	உ	ந	தே	ஆ	ம
..............னம்	க	வ	இ	த	தி	ம
.................த்து	மு	சொ	கு	வா	ப	கூ
................டை	க	வி	ப	அ	கு	கூ

(எ-டு)

1. பாடல்
2. ________________
3. ________________
4. ________________
5. ________________
6. ________________

1. கனம்
2. ________________
3. ________________
4. ________________
5. ________________
6. ________________

1. முத்து
2. ________________
3. ________________
4. ________________
5. ________________
6. ________________

1. கடை
2. ________________
3. ________________
4. ________________
5. ________________
6. ________________

@KTBS
NOT TO BE REPUBLISHED

க. சரியான எழுத்தால் நிரப்புக :

1. கு____தி (ரு,று)
2. சூ____யன் (றி, ரி)
3. க____ம்பு (று, ரு)
4. க____க (ர், ற்)
5. பாக____காய் (ற், ர்)
6. ஆ____ம்பம் (ர, ற)
7. க____ணன் (ண், ன்)
8. அ____ல் (ணி, னி)
9. பாடி____ள் (னா, ணா)
10. தலைய____ (னை, ணை)
11. குழ____தை (ந், ன்)
12. க____ (ண், ன்)
13. சி____த்தை (று, ரு)
14. அன்____ம் (ண, ன)
15. வ____க்கம் (ண, ன)

பறவைகளின் பெயரை எழுதுக.

©KTBS
NOT TO BE REPUBLISHED

எழுதிப் பழகுக.

ஒரு நாள் முல்லாவின் மனைவி கொல்லைப்புறத்தில் துணி துவைத்துக் கொண்டிருந்தாள்.

துணிக்குச் சோப்பு தேய்த்துவிட்டு சோப்புக் கட்டியை அருகே வைத்தாள்.

எங்கிருந்தோ வந்த ஒரு காகம் அந்த சோப்புக் கட்டியைத் தூக்கிக் கொண்டு பறந்து விட்டது. முல்லாவின் மனைவி "ஐயோ" என்று அலறினாள். வீட்டுக்குள் உட்கார்ந்திருந்த முல்லா கொல்லைப்புறத்துக்கு ஓடிவந்தார்.

''என்ன விஷயம்'' ? என்று கேட்டார். மனைவி நடந்ததைக் கூறினாள்.

''இதோ பார், என் உடைகளைக் காட்டிலும் காகம் கருப்பாக இருக்கிறது. சோப்பு அதற்குத்தான் நிச்சயம் தேவை. எனவே எடுத்துக் கொண்டு போய் விட்டது. போனால் போகட்டும்'' என்று காகத்திற்காகப் பரிந்து பேசினார் முல்லா.

ஆசிரியர் குறிப்பு :

குழந்தைகளிடம் அச்செழுத்துக்களைப் பார்த்து கையெழுத்து அழகாக இருக்கும் படி எழுதப் பழக்குதல் வேண்டும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

என் குடும்பம்

உங்கள் குடும்பத்தைப் பற்றி எழுதுக.

@KTBS NOT TO BE REPUBLISHED

புள்ளிகளை இணைத்து வண்ணம் தீட்டுவேன்.



@KTBS
NOT TO BE REPUBLISHED

படத்தில் உள்ள விலங்குகளை அவற்றின் பெயர்களுடன் இணைக்கவும்.

4. பேராசை பெருநட்டம்

ஒரு காட்டின் அருகில் வேடன் ஒருவன் வாழ்ந்து வந்தான். தினமும் வேட்டையாடுவதே அவனது தொழில்.

சில நாட்களாக அவனுக்கு வேட்டையே கிடைக்கவில்லை. அதனால் முழுவயிறு, அரைவயிறாகி, அரைவயிறும் கால்வயிறாகிவிட்டது.

பசி அவனைப் பல மைல் தூரம் காட்டினுள் சென்று வேட்டையாட வைத்தது.

மான் ஒன்று கண்ணில் பட்டது. அதனை அம்பெய்து கொன்றான். எடுத்துக்கொண்டான். வீடு நோக்கிச் சென்றான். வழியில் ஒரு பெரிய காட்டுப்பன்றி ஒன்று இருப்பதைப் பார்த்தான் ‘‘இதனைக் கொன்றால் மேலும் மூன்று நாட்களுக்கு நமக்கு உணவாகுமே’’. என்று அவன் நினைத்தான்.

உடனே பன்றியின் மேல் அம்பை எய்தான். ஆனால் அம்பு பட்ட பன்றி அவன் மேல் பாய்ந்து அவனைக் கொன்று அதுவும் இறந்தது.

இறந்த மான், இறந்த பன்றி, இறந்த வேடன் ! அவ்வழியே ஒரு நரி தற்செயலாக வந்தது. அவற்றைப் பார்த்தது. அதற்கு ஒரே கொண்டாட்டம். எதைத் தின்பது முதலில்? இத்தனையையும் விட்டுச் சென்ற வேடனிடமிருந்த வில்லின் நாண் கயிற்றை நரி கடித்தது. இறுகக் கட்டப்பட்ட நாண் கயிறு அல்லவா ! அது அறுந்ததும் வில்லின் வளைவு நிமிர்ந்தது. திடீர் வேகத்தோடு ‘படீர்’’ என்று பட்ட அடியால் நரி துடிதுடித்துச் செத்தது.

வேடன் மானோடு சென்றிருந்தால் பிழைத்திருப்பான். நரி மற்ற மூன்றில் எதையாவது கடித்திருந்தால் இறந்திருக்காது.

பாவம் ! அந்த நான்கு உடல்களும் காக்கைகளுக்கு விருந்தாயின.





@KTBS
NOT TO BE REPUBLISHED

பயிற்சி

அ· தொடர்களை வரிசைப் படுத்தி எழுதுக :-

1. நான்கு உடல்களும் காக்கைகளுக்கு விருந்தாயின.
2. அவ்வழியே நரி தற்செயலாக வந்தது.
3. வேடன் காட்டினுள் வேட்டையாடச் சென்றான்.
4. மானை அம்பெய்து கொன்றான்.
5. நரி துடிதுடித்துச் செத்தது.
6. வேடன் மேல் பன்றி பாய்ந்து கொன்றது.

____

____

____

____

____

____

@KTBS NOT TO BE REPUBLISHED

ஆ. வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடை எழுதுக :-

1. வேடன் எங்கு வாழ்ந்து வந்தான் ?

____

2. வேடனின் தொழில் என்ன ?

____

3. வேடனின் கண்ணில் பட்டது யாது ?

____

4. பன்றி யார் மேல் பாய்ந்தது ?

____

5. அவ்வழியே யார் வந்தது ?

____

6. கதையின் நீதி என்ன ?

____

இ. கோடிட்ட இடத்தை நிரப்புக : -

1. மானை .... எய்து கொன்றான்.
2. நரிக்கு ஒரே ....
3. இறுகக் கட்டப்பட்ட .... கயிறு அறுந்தது.
4. நான்கு உடல்களும் .... விருந்தாயின.
5. பேராசை ....

@KTBS NOT TO BE REPUBLISHED

ஈ. பின் வரும் சொற்களைப் பாடப் பகுதியில் கண்டு பிடித்து அடிக்கோடிடுக :-

கண்ணில் பட்டது : பலமைல் தூரம் : தற்செயலாக
கொண்டாட்டம் : பிழைத்திருப்பான் : விருந்தாயின :
வேகத்தோடு : நாண்கயிறு : துடிதுடித்து இறந்திருக்காது .

உ. வீட்டில் வளர்க்கும் பிராணிகள், காட்டில் வாழும் பிராணிகள் என பட்டியல் செய்யவும்.

பசு, முயல், புலி, நாய், சிங்கம், பூனை, கரடி, மான், எருமை,
ஆடு, யானை, சிறுத்தை, குதிரை, நரி, எலி, எருது

வீட்டில் வளர்க்கும் பிராணிகள்	காட்டில் வாழும் பிராணிகள்

ஊ. இனமில்லாததை வட்டமிடுக.

1. பசு, ஆடு, புலி, எருமை.
2. சிறுத்தை, சிங்கம், புலி, எருமை.
3. புறா, கிளி, பூனை, குருவி.
4. துப்பாக்கி, பீரங்கி, வில், வெடிகுண்டு.
5. வெண்டை, தக்காளி, ஆப்பிள், கத்தரிக்காய்.

NOT TO BE REPUBLISHED @KTBS

எ. பாடிப் பழகுக : -

வெள்ளை முயல் ஓடுது.
வேகமாக ஓடுது.
குதித்துக் குதித்து ஓடுது.
முத்துப் போன்ற கண்ணிலே
மேலும் கீழும் பார்க்குது.

ஏ. கண்டுபிடித்து எழுதுக : -

1. மூன்று கோடுகள் முதுகில் இருக்கும் ....
2. முதுகில் வீட்டை சுமக்கும் ....
3. முறம் போல காது இருக்கும் ....
4. பாலை விரும்பிக் குடிக்கும் ....
5. கிளைக்குக் கிளை தாவும் ....

விலங்குகளின் பெயர்களை எழுதுக.











© KTBS NOT TO BE REPUBLISHED

பாட்டியம்மா ! பாட்டியம்மா !

குழந்தைகளை இரண்டு குழுக்களாகப் பிரித்து, ஒரு குழு பாடலில் உள்ள கேள்விப்பகுதியைக் கேட்கச் செய்து மற்றொரு குழுவினரை விடையைக் கூறச் செய்யவும்.

பாட்டியம்மா பாட்டியம்மா
எங்கே செல்கிறாய் ? - பசு வாங்க !
பாட்டியம்மா பாட்டியம்மா
பசு எதற்கு ? - பால் கறக்க !
பாட்டியம்மா பாட்டியம்மா
பால் எதற்கு ? - தயிர் ஆக்க !
பாட்டியம்மா பாட்டியம்மா
தயிர் எதற்கு ? வெண்ணெய் எடுக்க !
பாட்டியம்மா பாட்டியம்மா
வெண்ணெய் எதற்கு ? - நெய் எடுக்க !
பாட்டியம்மா பாட்டியம்மா
நெய் எதற்கு ? - பணியாரம் செய்ய !
பாட்டியம்மா பாட்டியம்மா
பணியாரம் எதற்கு ? - பகிர்ந்து உண்ண !

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புக

NOT TO BE REPUBLISHED @KTBS

ஐ. சரியா(✓) தவறா (✗) எழுதுக

1. வேட்டையாடுவது வேடனின் தொழில் ( )
2. சில நாட்களாக அவனுக்கு அதிக வேட்டை கிடைத்தது ( )
3. மானின் மேல் அம்பு எய்தான் ( )

4. பன்றியின் மீது அம்பு எய்தான். பன்றி அவன் மீது பாயவில்லை ( )

5. நரி நேராகச் சென்று வேடனின் காலைக் கடித்தது ( )

6. நான்கு உடல்களும் காக்கைகளுக்கு விருந்தாயின ( )

புள்ளிகளை இணைத்துத் தகுந்த வண்ணம் தீட்டுக.



@KTBS
NOT TO BE REPUBLISHED

Y3S6N3

5. சிற்றூர்



NOT TO BE REPUBLISHED

சின்னப்பள்ளி ஒன்றுண்டு
பெரிய கோயில் பல உண்டு
நன்செய் புன்செய் நாற்புறமும்
நடவும் உழவும் இசைபாடும்

தென்னையும் பனையும் பலா மரமும்
செடியும் கொடியும் அழகுதரும்.
நன்னீர் வாய்க்கால் ஏரிகுளம்
நலம் கொழிப்பது சிற்றூராம்.

மச்சுவீடு ஏழெட்டு
மாடிவீடு நாலைந்து
குச்சுவீட்டு வாயில்கள்
குனிந்து போக பலவுண்டு !

தச்சுப் பட்டறை ஒன்றுண்டு !
தட்டார் பட்டறை ஒன்றுண்டு !
அச்சுத் திரட்டும் கருமாரின்
பட்டறை உண்டு சிற்றூரில் !

காக்கா ஒருபுறம் கா கா கா !
குருவி ஒருபுறம் கீ கீ கீ !
மேய்க்கும் ஆடு மே மே மே !
மின்னும் கோழி கோ கோ கோ !
பார்க்கும் பூனை மீ மீ மீ !
பசுங்கன்றும் மா மா மா !
ஆக்கும் இந்தக் கச்சேரி
அங்கங்குண்டு சிற்றூரில்
கம்பும் தினையும் கேழ்வரகும்
கட்டித் தயிரும் சம்பாவும்
கொம்பில் பழுத்த கொய்யா மா
குலையில் பழுத்த வாழையுடன்
வெம்பும் யானைத் தலை போல
வேரில் பழுத்த நல்ல பலா
நம்பிப் பெறலாம் சிற்றூரில்
நாயும் குதிரை போலிருக்கும் !

- பாரதிதாசன்.

NOT TO BE REPUBLISHED @KTBS

பயிற்சி

அ. வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. சிற்றூரில் என்ன உண்டு ?

____

2. சிற்றூரில் எவை இசைபாடும் ?

____

3. சிற்றூரில் எவ்விதமான வீடுகள் உள்ளன ?

____

4. சிற்றூரில் என்னென்ன பட்டறைகள் உள்ளன ?

____

5. உன் ஊரில் என்னென்ன பயிர்கள் விளைவிக்கப் படுகின்றன ?

____

@KTBS
NOT TO BE REPUBLISHED

ஆ. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. நன்செய் புன்செய் நாற்புறமும் .... இசைபாடும்.
2. நன்னீர் வாய்க்கால் ஏரிகுளம் நலம் .... சிற்றூராம்.
3. கொம்பில் பழுத்த .... வேரில் பழுத்த ....
4. குலையில் பழுத்த ....
5. சிற்றூரில் நாயும் .... போலிருக்கும்.

இ. பிரித்தெழுதுக :-

1. நாற் புறம் = ...
2. நன்னீர் = ...
3. சிற்றூர் = ...
4. அச்சுத்திரட்டு = ...

ஈ. சேர்த்தெழுதுக :-

1. பசு + கன்று = ...
2. போல் + இருக்கும் = ...
3. அங்கு + அங்கு = ...
4. கட்டி + தயிர் = ...

உ. பொருத்துக :-

	அ	ஆ	
1.	கொம்பில் பழுத்த	அ) வாழை	______________
2.	வேரில் பழுத்த	ஆ) கொய்யா	______________
3.	குலையில் பழுத்த	இ) பலா	______________

ஊ. ஓசைகள் பொருத்தி எழுதுக:-

	அ		ஆ
1.	காக்கை	அ.	மே மே மே
2.	குருவி	ஆ.	மியாவ் மியாவ்
3.	ஆடு	இ.	கா கா கா கா
4.	பூனை	ஈ.	மா மா மா
5.	பசுங்கன்று	உ.	கீ கீ கீ

எ. குழுவில் சேராததை வட்டமிடுக : -

1. தென்னை, பனை, ஈச்சம், பலா
2. வாழை, கொய்யா, பலா, கத்தரி
3. மாடிவீடு, ஓட்டுவீடு, கூரைவீடு, கோயில்
4. தச்சுப்பட்டறை, நடிப்புப்பட்டறை, தட்டார்பட்டறை, கருமார் பட்டறை

5. மல்லிகை, முல்லை, காலிபிளவர், ரோஜா

6. மயில், புலி, சிங்கம், சிறுத்தை

ஏ. மாறியுள்ள எழுத்துக்களை வரிசைப்படுத்தி மறைந்துள்ள பறவைகளின் பெயரைக் கண்டுபிடித்து எழுதுக

து	த்	வா		வா	த்	து
கு	க்	கொ				
ம்	கா	க				
யி	ம	ல்				
றா	பு					
வ	சே	ல்				

@KTBS
Not to be REPUBLISHED

காடு அழிந்தால் நாடு அழியும்.

6. முதலையா? நரியா ?

கமலாபுரம் ஏரி மிகப்பெரியது. அதில் முதலை ஒன்று வசித்து வந்தது. ஏரியில் நீர் குடிக்க வரும் விலங்குகளைப் பிடித்துத் தின்னுவதுஅதன் வழக்கம். ஒரு நாள் நரி ஒன்று நீர் குடிக்க ஏரியில் இறங்கியது. முதலை சட்டென்று நரியின் காலைக் கவ்வியது.

“ஆ ! முதலை ..... !” நரி அதிர்ச்சி அடைந்தது. தப்பிக்க வேண்டுமே ! என்ன செய்வது ?’ - சிந்தித்தது நரி.

“என்னுடைய கால் என்று நினைத்து மரத்தின் வேரைப் பிடித்துள்ளாயே !” என்று நரி தந்திரமாகக் கூறியது.

© KTBS Not to be republished

“அப்படியா ! ” என்று முதலை ஏமாந்து வாயைத்திறந்தது. உடனே நரி, காலை இழுத்துக் கொண்டது. ஒரே தாவலில் கரை ஏறியது.

“என்னையா பிடிக்கப் பார்க்கிறாய் ? ’ - நரி ஏளனமாகச் சிரித்தது.

முதலைக்கும் கோபம் அதிகமானது. நரியை எப்படியாவது பிடிக்க வேண்டுமே ! என்ன செய்யலாம் ? சிந்திக்க ஆரம்பித்தது.

மறுநாள், முதலை ஒரு திட்டத்துடன் கரையில் கிடந்த நாவல் பழங்களைத் திரட்டிக் குவியலாக்கியது. அதனுள் தன்னை மறைத்துக் கொண்டது. வழக்கம்போல் நரி தண்ணீர் குடிக்க ஏரிக்கு வந்தது. பழக்குவியலைப் பார்த்ததும் ‘‘ எவ்வளவு பழங்கள் !” என்று ஆவலுடன் அருகே சென்றது.

“பழக்குவியல் அசைகிறதே ! ” - நரி திடுக்கிட்டது. கூர்ந்து கவனித்தது. ‘ஏதோ வெள்ளையாய்த் தெரிகிறதே ! முதலையின் பற்களாய் இருக்குமோ ... ? ஆம் ! இது முதலைதான்’ முதலையின் தந்திரத்தை நரி புரிந்து கொண்டது.

“முதலையே ! என்னையா பிடிக்கப் பார்க்கிறாய் ? ” என்று கூறிக் கொண்டே ஓடியது. முதலைக்கு மீண்டும் மீண்டும் ஏமாற்றம்.

‘நரியை பிடித்தே ஆகவேண்டும். என்ன செய்வது ? ’

ஒரு நாள் தூரத்தில் நரி வருவதைப் பார்த்து உடனே மணலில் படுத்து இறந்தது போல் பாசாங்கு செய்தது. அருகில் வந்த நரி, முதலை அசையாமல் படுத்துக் கொண்டு இருந்ததைக் கண்டது, ‘அருகில் மணல் ஈரமாக இருக்கிறதே !

NOT TO BE REPUBLISHED ©KTBS

சற்று முன்னர்தான் முதலை நீரிலிருந்து வந்திருக்க வேண்டும். என்னைப் பிடிக்கத்தான் இறந்தது போல் நடிக்கிறது' - சிந்தித்த நரி முதலையை ஏமாற்ற ஒரு தந்திரம் செய்தது.

"இறந்து போன முதலை தன் வாலை ஆட்டுமே ! " - என்று உரக்கக் கூறியது. இதைக்கேட்ட முதலை, உடனே தன் வாலை வேகமாக ஆட்டியது.

நரி 'கல கல' என சிரித்து, ' இறந்து போன பிறகு காது கேட்குமா ? வாலைத்தான் ஆட்ட முடியுமா ? " என்று கூறியது.

முதலைக்கு எல்லை இல்லாத கோபம் நரியைப் பிடிக்கப் பாய்ந்தது.

"என்னை உன்னால் பிடிக்க முடியாது ' - என்று கூறிக் கொண்டே நரி தப்பி ஓடியது.

இப்படியே முதலையும் நரியும் மாறி மாறித் தந்திரம் செய்து கொண்டே இருந்தன.

©KTBS
NOT TO BE REPUBLISHED

பயிற்சி

அ. ஒன்று அல்லது இரண்டு வரிகளில் விடையளிக்க : -

1. முதலை தண்ணீர் குடிக்க வரும் விலங்குகளை என்ன செய்யும் ?

   ____

2. தன்னுடைய காலைக் கவ்விய முதலையிடம், நரி என்ன சொல்லித் தப்பித்தது ?

   ____

3. முதலை நரியைப் பிடிக்கப் போட்ட முதல் திட்டம் யாது ?

____

4. இறந்தது போல் நடித்த முதலையை எழுப்ப நரி செய்த தந்திரம் என்ன ?

____

5. முதலை இறந்தது போல் நடிக்கிறது என்று நரி எப்படிக் கண்டுபிடித்தது ?

____

ஆ. படித்தான் - முதல் எழுத்தை மாற்றி, வேறு எழுத்தைச் சேர்த்து புதிய சொற்களை உருவாக்குக : -

படித்தான்

(எ.டு.) கடித்தான்

....

....

....

@KTBS
NOT TO BE REPUBLISHED

இ. நடுவில் கொடுக்கப்பட்ட எழுத்தை முதல் எழுத்தாகக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக : -



1. காடு 2. .... 3. .... 4. ....

5. .... 6. .... 7. .... 8. ....

மீனாவின் பையில் இருப்பது என்ன ?

வட்டத்திலுள்ள எழுத்துக்களைக் கட்டத்தில் அடித்துவிடு. மீனாவின் பையில் இருப்பதை அறிவோம்.

படலயர

மி	~~ப~~	~~ட~~	~~ர~~
~~ய~~	ட்	~~ல~~	~~ப~~
~~ட~~	~~ப~~	டா	~~ய~~
~~ர~~	~~ட~~	~~ல~~	ய்
~~மி~~	~~ப~~	~~ட~~	~~ர~~

மிட்டாய்

கசடறப

க	ச	ட	ற	ப
ப	வ	ற	ட	ச
ச	க	ளை	ட	ற
ற	ச	ப	ய	க
ட	ப	ல்	ற	க

தனமியளமதி

பெ	தி	ன	ம	ய
ய	மி	ன்	ள	தி
தி	மி	ய	சி	ள
ய	ள	தி	ல்	ன
ன	த	ய	ம	ள

@KTBS NOT TO BE REPUBLISHED

ஈ. பொருத்தமான சொல்லை எழுதுக

1. குலை குலையாய்க் காய்க்கும் .... (வாழை, சப்போட்டா)
2. பளபளப்பாக இருக்கும் .... (கண்ணாடி, மரப்பலகை)
3. தத்தித் தத்திப்போகும் .... (தவளை, பாம்பு)
4. சல சல வென்று ஓடும் .... (ஆறு, குளம்)
5. வழுவழுப்பாக இருக்கும் .... (செங்கல், கூழாங்கல்)

க கர வரிசை

படித்துப் பழகுக

1. கந்தன் காலையில் படித்தான்.
2. கால்கள் நடக்க உதவும்.

3. கிழக்கில் சூரியன் உதிப்பான்.
4. கீரை உடலுக்கு நல்லது.
5. குறத்தி குறி சொல்லுவாள்
6. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.
7. கெட்டவன் கேடு அடைவான்.
8. கேலி பேசாதே.
9. கைராட்டினம் காந்தியடிகளின் ஆயுதம்.
10. கொடிமரத்தில் கொடியேற்றலாம்.
11. கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்.
12. கௌதாரி ஒரு பறவை.

சொல் விளையாட்டு :

குழுவாக அமர்ந்து கொள்க. ஒருவர் ஒரு சொல்லைச் சொல்ல, மற்றொருவர் அந்த சொல் முடியும் எழுத்தைக் கொண்டு புதிய சொல்லைக் கூறவும். இதைப் போன்ற விளையாட்டைத் தொடரவும்.

(எ . டு) படகு - குருவி- விளக்கு- குளவி ;
பறவை- வைகை- கைதி- திங்கள்.

காலம் எவருக்கும் காத்திருப்பதில்லை.

@KTBS NOT TO BE REPUBLISHED

வண்ணமிடுக.



@KTBS
NOT TO BE REPUBLISHED

7. மேகம்

ஆனை போல, குதிரை போல
அழகு மேகம் காணுது - கரும்
பூனை போல, எருமைக் கூட்டம்
போல வேடம் பூணுது.

ஆடுபோல மேகக் கூட்டம்
அங்கே மந்தை கூடுது - இடி
போடும் சத்தம் கேட்டுக் கேட்டுப்
போய் மறைய ஓடுது.

சாட்டைபோல மின்னல் பட்டுத்
தவழும் மேகம் குலையுது - மின்னல்
வேட்டையாலே, யானை குதிரை
வேடம் எல்லாம் கலையுது.

- மின்னூர் சீனிவாசன்

வண்ண வண்ண மீன்கள்.

NOT TO BE REPUBLISHED @KTBS

குறிப்பு : ஆசிரியர் பாடலைப் பாடி மாணவர்களைக் கேட்கச் செய்யவும். பாடலை ஏற்ற இறக்கத்துடன் பாடலாம். மாணவர்களைத் தனித்தோ அல்லது குழுவாகவோ பாடலை பாடச் செய்யலாம்.

படித்தறிக : -

ஆனை போல	அருஞ்சொற்பொருள்
குதிரைபோல	ஆனை = யானை
எருமைக் கூட்டம் போல	காணுது = காணப்படுகிறது.
ஆடுபோல	மந்தை = கூட்டம்
வேட்டைபோல	குலையுது = மறைகிறது.
சாட்டை போல	
யானை, குதிரை	
வேடம் கலையுது.	

@KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சி

அ. வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. மேகங்கள் என்னென்ன வடிவங்களில் காணப்படுகின்றன ?

____

2. மேகக் கூட்டம் எதைப் போல கூடுது ?

____

3. இடிசத்தம் எதிலிருந்து வருகிறது ?

____

4. மின்னல் எதனைப் போன்று தோன்றுகிறது ?

____

5. எந்தெந்த வேடங்கள் எல்லாம் கலையுது ?

____

ஆ. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. ஆனை போல, குதிரைபோல அழகு .... காணுது
2. எருமைக் கூட்டம் போல .... பூணுது.
3. ஆடுபோல மேகக்கூட்டம் அங்கே .... கூடுது.
4. சாட்டை போல .... பட்டுத் தவழும் மேகம் குலையுது.

இ. படித்துப் பார்த்து சரியா (✓) தவறா (✗) எனக்குறிப்பிடுக.

1. ஆனைபோல குதிரை போல அழகு மேகம் காணுது ( )
2. மேகம் மழையைக் கொடுக்கும் ( )
3. ஆடு போல மேகக்கூட்டம் அங்கே மந்தை கூடவில்லை ( )
4. நீராவியால் மேகம் உண்டாகும் ( )
5. பயிர் செழித்து வளர மழை தேவை இல்லை ( )
6. மழை பெய்தால் ஏரி குளங்கள் நிரம்பி வழியும் ( )

@KTBS NOT TO BE REPUBLISHED

8. மோர் முப்பேர் பெற்றது

ஒரு நாள் காளமேகப் புலவர் ஒரு மோர் விற்கும் பெண்ணிடம் மோர் வாங்கினார். மோர் தண்ணீர் போல் இருந்தது. இதனைக் கண்ட புலவருக்கு வயிற்றெரிச்சல் மிகுதியாயிற்று. மோர் ஏன் இவ்வளவு தண்ணீராக இருக்கிறது ? என்று அப்பெண்ணைப் பார்த்துக் கேட்டார். அதற்கு அவள் தண்ணீர் மிகுதியாக கலக்கவில்லை, நல்ல மோர் தான் என்றும் வாதாடினாள். அவள் கூற்று புலவருக்கு நகைப்பை உண்டாக்கியது.

@KTBS NOT TO BE REPUBLISHED

உடனே புலவர் “மோரே ! நீ வானத்தில் இருக்கும் போது “கார்” என்னும் பெயரைப் பெற்றிருந்தாய் ! பின் அங்கிருந்து நிலத்தை அடைந்த பிறகு ‘‘நீர்’’ என்னும் பெயரைப் பெற்றிருந்தாய், அதன் பிறகு இப்பெண்ணின் கையில் வந்த பிறகோ நீ “மோர்” என்னும் பெயரையும் பெற்றுவிட்டாய், இவ்வாறு கார், நீர், மோர், என்னும், முப்பேரும் பெற்றிருப்பது போல் வேறு யார்தான் பெற்றிருக்கின்றனர் !’’ என்று வேடிக்கையாகக் கூறினார்.

இதனைக் கேட்டு அங்குக் கூடியிருந்தவர்கள் அனைவரும் நகைத்தனர். அந்தப் பெண்ணும் நாணமுற்றாள்.

@KTBS
NOT TO BE REPUBLISHED

பயிற்சி

அ. ஒரு வரியில் விடை தருக :-

1. புலவர் பெண்ணிடம் எதை வாங்கினார் ?

____

2. பெண்ணிடம் புலவர் மோரைப் பற்றி என்ன கேட்டார் ?

____

3. அப்பெண் எதற்காக வாதாடினாள் ?

____

4. மோர் பெற்ற வேறு பெயர்கள் யாவை ?

____

ஆ. கோடிட்ட இடங்களை நிரப்புக : -

1. மோர் .... போல் இருந்தது.
2. வானத்தில் இருக்கும் போது .... என்னும் பெயர் பெற்றிருந்தாய்.
3. நிலத்தை அடைந்த பிறகு .... என்னும் பெயர் பெற்றாய்
4. பெண்ணின் கையில் வந்த பிறகு .... என்ற பெயர் பெற்றாய்.

இ. கீழ்காணும் பெயர்களை, அவர்கள் செய்யும் தொழில்களோடு பொருத்துக : -

1) சிற்பி - கல்வி கற்பித்தல்
2) ஓவியர் - சிலை செதுக்குதல்
3) ஆசிரியர் - ஓவியம் வரைதல்
4) கவிஞர் - உழுது பயிர் செய்தல்
5) உழவர் - கவிதை எழுதுதல்.

NOT TO BE REPUBLISHED @KTBS

பொருத்திப் படிக்க : -

யானை	-	கத்துகிறது	பிளிறுகிறது
குதிரை	-	குரைக்கிறது	....
சிங்கம்	-	கூவுகிறது	....
நாய்	-	பிளிறுகிறது	....
கழுதை	-	அகவுகிறது	....
மயில்	-	உறுமுகிறது	....
குயில்	-	கனைக்கிறது	....

நடுவில் உள்ள எழுத்தை நீக்கி, கிடைக்கும் புதிய சொல்லை எழுதுக : -

துவரை	துரை		
பட்டு	....	கூட்டு	....
தேவன்	....	நூடல்	....
வெற்றி	....	குட்டை	....
பகடை	....	நாகம்	....

நண்பர்களுடன் குழுவாகப் பாடுக :-

1. மானைப் போல துள்ளி வா !
2. யானை போல அசைந்து வா !
3. பறவையைப் போலப் பறந்து வா !
4. தவளைப் போல தத்தி வா !
5. புலியைப் போல பதுங்கி வா !
6. குதிரை போல ஓடி வா !

© KTBS NOT TO BE REPUBLISHED

சொல் அட்டைகளை இணைத்துத் தொடர் எழுதுக .

கோழி	கீழே	நரி
விழுகிறது	மேகம்	குஞ்சு
கூறியது	நம்பி	குகைக்கு
ஏமாறாதே	தந்திரக்காரரை	அழைத்துச் சென்றது.

1. ....
2. ....
3. ....
4. ....
5. ....

வண்ணமிடுக.

NOT TO BE REPUBLISHED @KTBS

9. நெருப்புக் கோழி

H6P7J2

நமது நாட்டில் இல்லையென்ற
நல்ல கோழி தெரியுமா ?
தமது பெரிய சிறகடித்துத்
தரையில் பாய்ந்து ஓடுமே !

பறவையினத்தில் பெரியது
பாலை வனத்தில் வாழுமே
சிறகடித்து வானிலே
சிறிதும் பறப்பதில்லையே !

வேட்டையாடிக் கோழியை
விரும்பிப் பிடித்து வளர்ப்பவர்
நாட்டில் காட்சி சாலையில்
நமக்கு அமைத்துக் காட்டுவார் !

நெருப்புக்கோழி என்றிதை
நினைத்துக் கூறி அழைத்தவர்
நெருப்பு தின்று வாழ்வதை
நேரில் என்றும் கண்டிலர் !

பெகு. வரதராசன்.

©KTBS
NOT TO BE REPUBLISHED

பயிற்சி

படிக்க : -

தரையில்	வளர்ப்பவர்
பாய்ந்து	காட்டுவார்
பறவையினத்தில்	அழைத்தவர்
பாலைவனத்தில்	நெருப்பு தின்று
வேட்டையாடி	கண்டிலர்

அ. விடையளிக்க : -

1. நெருப்புக் கோழி எவ்வாறு ஓடும் ?

____

2. எது வானில் பறப்பதில்லை ?

____

3. நெருப்புக் கோழியை நாம் எங்குக் காணலாம் ?

____

4. நெருப்புக் கோழி நெருப்பைத் தின்னுமா ?

____

@KTBS NOT TO BE REPUBLISHED

ஆ. கோடிட்ட இடங்களை நிரப்புக :-

1. பெரிய சிறகடித்துத் தரையில் .... ஓடுமே
2. நெருப்புக் கோழி பறவையினத்தில் ....
3. நாட்டில் .... சாலையில் நமக்கு அமைத்துக் காட்டுவார்.
4. நெருப்பு தின்று .... நேரில் என்றும் கண்டிலர்.

இ. எதிர்ச் சொல் பொருத்துக :-

நல்ல	X	மறைவில்	X ....
பெரிய	X	சோலைவனம்	X ....
பாலைவனம்	X	கெட்ட	X ....
நேரில்	X	சிறிய	X ....

ஈ. பிரித்தெழுதுக : -

இல்லையென்ற = இல்லை + என்ற

சிறகடித்து = ...

பறப்பதில்லை = ...

பாய்ந்தோடும் = ...

நெருப்புத்தின்று = ...

உ. பறவைகளின் ஒலிகள் பெயரை எழுதுக :-

காகம் ....

கிளி ....

மயில் ....

குயில் ....

சேவல் ....

ஆந்தை ....

(கொக்கரிக்கும், கூவும், கரையும், அகவும், பேசும், அலறும்)

©KTBS NOT TO BE REPUBLISHED

ஊ. சொற்களை இணைத்துத் தொடராக்குக.

காகம்		
நெருப்புக்கோழி	பறந்தது	காகம் பறந்தது
தாமரை		....
பருந்து	ஓடியது	....
மல்லிகை	மலர்ந்தது	....
முல்லை		....
குருவி		....
கௌதாரி		....

எ. சொற்களைச் சரியான ஒலிப்புடன்படி :

அறை	கரை	ஆறு	கரி
கறை	திரை	கூறு	வரி
மறை	நரை	நூறு	சரி
சிறை	தரை	ஏறு	வரி

ஏ. சொற்களை அகர வரிசைப்படுத்துக.

தாள், தை, திண்ணை, தவளை, தேனீ, தோகை, தீபாவளி, துவரை, தொட்டில், தூய்மை, தென்னை.

....

....

....

@KTBS NOT TO BE REPUBLISHED

எழுதிப் பழகுக.

நெருப்புக் கோழி என்றிதை

நினைத்துக் கூறி அழைத்தவர்

நெருப்பு தின்று வாழ்வதை

நேரில் என்றும் கண்டிலர் !

கல்வி கண் போன்றது

© KTBS NOT TO BE REPUBLISHED

10. குயில் (உரையாடல்)



இராமு, சோமு இருவரும் வீட்டின் பின்புறமுள்ள தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது மரத்திலிருந்து கூ ...! கூ ...! என்ற இனிமையான குரல் கேட்டது. உடனே இருவரும் எங்கிருந்து இந்த இனிய ஒலி கேட்கிறது ? என மரத்தைச் சுற்றிப் பார்த்தனர்.

அப்பொழுது அங்கு இராமுவின் தாய் வந்தார்.

அம்மா : எதைத் தேடுகிறீர்கள் ?

பிள்ளைகள் : இனிமையான குரல் கேட்கிறது ஆனால் பறவை

©KTBS NOT TO BE REPUBLISHED

தெரியவில்லை, எனவே அந்த பறவையைத் தேடுகிறோம், அம்மா

அம்மா : அதுவா, அது குயிலின் குரல். அதோ பாருங்கள், மரக்கிளையில் மறைந்து இருக்கிறது.

பிள்ளைகள் : ஆமாம் ! அது காகம் போலக் கருப்பாக இருக்கிறதே !

அம்மா : ஆம் ! காகம் போலக் கருப்பாகத்தான் இருக்கும், உருவத்தில் சிறியது. ஆனால் அதன் குரல் மிகவும் இனிமையாக இருக்கும்.

இராமு : இத்தனை நாட்களாக நாங்கள் இதைப் பார்க்கவே இல்லையே !

அம்மா : ஆம் ! இதைக் கோடைக் காலத்தில் அதிகமாகப் பார்க்கலாம். இந்தப் பறவைக்குக் கூடு கட்டத் தெரியாது. குஞ்சு பொரிக்கவும் தெரியாது, ஆனால் காக்கைக்குத் தெரியாமல் அதன் கூட்டில் முட்டையிட்டு மறைந்து விடும்.

சோமு : முட்டைகளை காக்கை அடையாளம் காணாதா ?

அம்மா : காக்கை முட்டைக்கும், குயில் முட்டைக்கும் வேறுபாடு ஒன்றுமில்லை. எல்லா முட்டைகளையும் தன்னுடையது என்று நினைத்து காக்கை அடைகாக்கும். குஞ்சுகள் பொரிந்ததும் பாசமுடன் காக்கை உணவளித்துப் பாதுகாக்கும்.

சோமு : காகம் எப்பொழுது தான் இதை அறியும் ?

அம்மா : சில நாட்கள் கழிந்த பிறகு குஞ்சுகள் ஓசை

@KTBS
NOT TO BE REPUBLISHED

எழுப்பும், அப்போது காகம் குரலில் உள்ள வேறுபாட்டினை அறிந்து விரட்டிவிடும் குயில் குஞ்சுகள் பறந்து போய்ச் சுதந்திரமாக வாழும்.

இராமு : குயில் குஞ்சுகளை தன் இனத்தோடு குயில் சேர்த்துக் கொள்ளுமா ?

அம்மா : ஆமாம் குயில் தன் இனத்துடன் குஞ்சுகளைச் சேர்த்துக் கொள்ளும் குயில் ஒரு சோம்பலான பறவை. ஆண் குயில் மட்டும் இனிமையாகக் கூவும். பெண் குயில் கூவாது.

பிள்ளைகள் : குயில்கள் எங்கு வாழ்கின்றன ?

அம்மா : குயில் நிலையாக ஓர் இடத்தில் வாழாது. குயிலுக்கும் கூடு கட்டத்தெரியாது. எனவே மழைக்காலம் வந்தவுடன் வேறு இடத்திற்குப் பறந்துச் சென்று விடும். அதனால் இதனை "நாடோடிப் பறவை" என்பார்கள்.

சரி, சரி, பொழுது சாய்ந்து விட்டது இருவரும் உள்ளே வாருங்கள்.

பிள்ளைகள் : சரி ! அம்மா -

NOT TO BE REPUBLISHED @KTBS

அ. புதிய சொற்கள் :

பறவைக் கூடு

கோடைக் காலம்

அடைகாக்கும்

பொரிந்ததும்

துரத்தும்

சோம்பல்

நாடோடி

ஆ. விடையளிக்க.

1. குயிலின் ஒலி எவ்வாறு இருக்கும் ?

____

____

2. குயில் ஏன் காக்கைக் கூட்டில் முட்டை இடுகிறது ?

____

____

3. மழைக் காலத்தில் குயில்கள் எங்குச் செல்கின்றன ?

____

____

4. குயிலை ஏன் சோம்பலான பறவை என்று அழைக்கிறார்கள் ?

____

____

@KTBS
NOT TO BE REPUBLISHED

இ. தொடர் அமைக்க : -

காகம்	தோகை விரித்து	அமர்ந்தது
குயில்	அடைகாத்து	மேய்ந்தது
பசு	மரக்கிளையில்	இருந்தது
மயில்	புல்	ஆடியது

ஈ. பின் வரும் சொற்களைப் பாடப் பகுதியில் கண்டு பிடித்து அடிக் கோடிடுக :-

1. இலைக்குப் பின்னால், இனியகுரல், ஒலித்தது. வேறுபாடு கோடைக் காலத்தில். இருட்டாகி, அடைகாத்து, சோம்பலான பறவை.

உ.படத்திற்கு உரிய பறவையின் பெயர்களை எழுதுக.

....

....

....

....

@KTBS NOT TO BE REPUBLISHED

உ.சொல் அட்டைகளை இணைத்து தொடர் எழுதுக :

குயில் | காகம் | கூவுகிறது | கிளி | அகவும் | கீச்சிடும் | சேவல் | கரையும் | மயில்

....

....

....

....

....

ஊ. கோடிட்ட இடங்களை நிரப்புக :-

1. குயில் .... பறவை என்பர்.
2. குயில் பறவைக்கு .... தெரியாது.
3. குயில் .... கூட்டில் முட்டை இடும்.
4. குயிலின் குரல் ....

எ. சொற்களை இணைத்துத் தொடராக்குக.

காகம்		காகம் பறந்தது
தாமரை	பறந்தது	....
பருந்து	மலர்ந்தது	....
மல்லிகை		....
முல்லை		....
குருவி		....

ஏ. உங்களுக்கு தெரிந்த விளையாட்டுகளின் பெயர்களை எழுதுக.

1. சடு குடு
2. ....
3. ....
4. ....
5. ....
6. ....

@KTBS NOT TO BE REPUBLISHED

எழுதிப் பழகுக.

குயில் இனிமையாகக் கூவும்

குயில் காக்கைக் கூட்டில் முட்டை இடும்

குயில் ஒரு நாடோடிப் பறவை

@KTBS NOT TO BE REPUBLISHED

ஐ. கோடிட்ட இடத்தை நிரப்புக

(நீளமாக, சிறியதாக, தூண், பானை, முறம்)

1. யானையின் வயிறு .... போன்று இருக்கும்.
2. இதன் கால்கள் .... போன்று இருக்கும்.
3. கண்கள் .... இருக்கும்.
4. காதுகள் .... போன்று இருக்கும்
5. துதிக்கை .... இருக்கும்.



ஒ. எதிர்ச் சொற்களைக் கட்டத்திற்குள் வட்டமிடுக / எடுத்து எழுதுக

உ	கு	ட்	டை	யா	ன
அ	ஏ	சி	றி	ய	ஆ
மெ	ல்	லி	ய	ஈ	ஊ
இ	கு	று	க	லா	ன

பெரிய X ....

அகலமான X ....

உயரமான X ....

தடித்த X ....

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா ?

©KTRS NOT TO BE REPUBLISHED

11. மேகம் கீழே விழுகிறது, ஓடுங்கள் !

N1V1B8

ஒரு காட்டில் கோழி ஒன்று தன் குஞ்சுகளுடன் வசித்து வந்தது. அதில் ஒரு குஞ்சு வெளியே சென்றது. அங்கும் இங்கும் பார்த்தவாறே ஒரு மரத்தின் அடியில் வந்து நின்றது. அப்போது மரத்திலிருந்து ஓர் இலை அதன் தலையின் மீது விழுந்தது. மேலே பார்த்தது, மேகங்கள் வானில் சூழ்ந்திருந்தன. மழை வரும் போலிருந்தது.

“ஓஹோ ! மேகம் கீழே விழுகிறது. நான் ஓடிப் போய் இதை அரசருக்குச் சொல்ல வேண்டும்” என்று நினைத்து வேகமாக ஓடியது.

எதிரே அதன் தாய்க் கோழி வந்தது.

“எங்கே போகிறாய் ? எதற்கு இந்த அவசரம் ? ” என்று கோழி கேட்டது.

“ஐயோ ! மேகம் வேகமாய் கீழே விழ வருகிறது. நான் அரசருக்கு இதைச் சொல்லப் போய்க் கொண்டிருக்கிறேன்” என்று குஞ்சு கூறியது.

“உனக்கு எப்படித் தெரிந்தது ? ” என்று கோழி கேட்டது. “மேகத்தின் ஒரு துண்டு என் தலை மீது விழுந்தது” என்று

NOT TO BE REPUBLISHED @KTBS

கோழிக்குஞ்சு கூறியது.

‘‘ அப்படியா! நானும் உன் கூட வருகிறேன். அரசருக்குத் தெரிவிப்போம் என்று கோழி சொன்னது.

கோழியும் அதன் குஞ்சும் அதி வேகமாக ஓடின. வழியில் ஒரு சேவல் வந்தது.

‘‘எங்கே கிளம்பி விட்டீர்கள் ?’’ - சேவல் கேட்டது.

‘‘மேகம் வேகமாகக் கீழே வந்து கொண்டிருக்கிறது. அதில் ஒரு துண்டு இதன் தலைமேல் விழுந்ததாம். நாங்கள் அதை அரசருக்குச் சொல்வதற்குப் போய்க் கொண்டிருக்கிறோம்’’ என்றது கோழி.

‘‘அப்படியா! வாருங்கள் நானும் வருகிறேன்’’ என்று சேவல் கூறியது.

கோழிக் குஞ்சு, கோழி, சேவல் மூன்றும் ஓடத் தொடங்கின.

வழியில் முயல் தடுத்து, ‘‘எங்கே இவ்வளவு அவசரமாக ஓடுகிறீர்கள்? என்றது.

சேவல் சொன்னது. ‘‘மேகம் வேகமாகக் கீழே விழ வந்து கொண்டிருக்கிறது, மேகத்தின் ஒரு துண்டு இந்த கோழிக்குஞ்சின் தலைமேல் விழுந்திருக்கிறது. நாங்கள் அதனை அரசருக்குத் தெரிவிக்க ஓடுகிறோம்’’ என்றது.

‘‘நானும் உங்களுடன் வருகிறேன், வாருங்கள் ஓடுவோம்!’’ என்று முயல் கூறியது.

கோழிக்குஞ்சு, கோழி, சேவல், முயல் நான்கும் வேகமாக ஓடுவதை ஒரு நரி பார்த்து தடுத்து நிறுத்திக் காரணம் கேட்டது.

நடந்ததை எல்லாம் முயல் கூறியது.

©KTBS NOT TO BE REPUBLISHED

நரி சொன்னது, ‘ஆமாம் ! ஆமாம் ! இதை அரசருக்கு அவசியம் சொல்லவேண்டும், நானும் வருகிறேன் வாருங்கள் போகலாம்,” என்று தந்திரத்துடன் நரி,

“உங்களுக்கு அரசரின் இருப்பிடம் செல்ல வழி தெரியாது. எனக்குத் தெரியும், வாருங்கள், போகலாம். ” என்று அனைவரையும் அதன் குகைக்கு அழைத்துச் சென்றது நரி.

குகைக்குள் சென்ற கோழிக்குஞ்சு, கோழி, சேவல், முயல் இவைகளில் ஒன்று கூடத் திரும்பி வெளியில் வரவே இல்லை.

நீங்கள் அவைகளை எங்காவது பார்த்தீர்களா ? பார்த்தால் கூறுங்கள்.

“தந்திரக்காரரை நம்பி ஏமாறாதே.”

பயிற்சி

அ. ஓரிரு வாக்கியங்களில் விடை தருக :-

1. கோழிக்குஞ்சின் தலையில் என்ன விழுந்தது ?

2. கோழிக்குஞ்சு தன் தலையின் மீது விழுந்த இலையை என்னவென்று நினைத்தது ?

3. தாய் கோழியைப் பார்த்துக் கோழிக்குஞ்சு கூறியது என்ன?

4. சேவலைப் பார்த்துக் கோழி கூறியது என்ன ?

5. கோழி, சேவல், முயல், கோழிக்குஞ்சு இவைகளைப் பார்த்து நரி என்ன சொல்லி எங்கே அழைத்துச் சென்றது ?

@KTBS
NOT TO BE REPUBLISHED

ஆ. பிரித்து எழுதுக :

1. கோழிக்குஞ்சு = ...
2. ஓடிப்போய் = ...
3. விழுந்திருக்கிறது = ...
4. உங்களுடன் = ...

இ. எதிர்ச்சொல் தருக.

1. வெளியே x ....
2. தாய் x ....
3. வேகமாய் x ....
4. வேண்டும் x ....
5. தெரிந்தது x ....

NOT TO BE REPUBLISHED @KTBS

ஈ. கீழ்க்கண்ட காலி இடத்தைச் சரியான சொற்றொடரால் (அடுக்குத் தொடர்) நிரப்புக :

குலை குலையாய், தின்னத்தின்ன, வளரவளர, ஓட ஓட, கொத்துக்கொத்தாய்.

1. எலியைப் பூனை .... விரட்டியது.
2. தென்னை மரம் .... காய்க்கும்.
3. மாம்பழம் .... இனிக்கும்.
4. அவரைக்காய் .... காய்க்கும்.
5. செடி .... மரமாகும்.

உ. முதல் எழுத்தை நெடிலாக மாற்றிப் பொருள் வேறுபாடு அறிக.

எடுத்துக்காட்டு : பட்டு - பாட்டு

1. படம் ....
2. நடு ....
3. நகம் ....
4. மடு ....
5. மதம் ....

ஊ. கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களின் பன்மையை எழுதுக :

எடுத்துக்காட்டு : மலர் - மலர்கள்

ஒருமை பன்மை

1. பசு ....
2. கல் ....
3. மாதம் ....
4. மரம் ....

@KTBS NOT TO BE REPUBLISHED

எ. கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆண்பால் சொற்களுக்கு இணையான பெண்பால் சொற்களை எழுதுக :

ஆண்பால் பெண்பால்

1. சகோதரன் ....
2. மகள் ....
3. பேரன் ....
4. தோழன் ....

1	2	3	4
மேகம்	மின்னல்	மழை	வளையில்
5	6	7	8
இலையில்	இலையைப்	கரை	தவளை
9	10	11	12
நண்டு	எறும்பு	புறா	கறுத்தது
13	14	15	16
மின்னியது	பெய்தது	நுழைந்தது	ஏறியது
17	18	19	20
சேர்ந்தது	தத்தளித்தது	போட்டது	கத்தியது

NOT TO BE REPUBLISHED @KTBS

ஏ. பின் வரும் கட்டங்களில் உள்ள எண்களைக் கொண்டு கதை எழுதுக.

1,12	10,18	______________	______________
2,13	11,6,19	______________	______________
3,14	10,5,16	______________	______________
8,20	7,17	______________	______________
9,4,15		______________	______________

1-12 மேகம் கறுத்தது

....

....

....

....

....

....

....

....

....

@KTBS
NOT TO BE REPUBLISHED

கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு

12. உடல் நலம் பேணல்

S2L1S1

உடலின் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்
இடமும் பொருளும் நோயாளிக்கு
இனிய வாழ்வு தந்திடுமோ ?

சுத்தமுள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீ அதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே !

காலை மாலை உலாவி நிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத்தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே !

தூயகாற்றும் நன்னீரும்
சுண்டப் பசித்த பின் உணவும்
நோயை ஓட்டி விடுமப்பா !
நூறு வயதும் தரும் அப்பா .

- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

©KTBS NOT TO BE REPUBLISHED



அருஞ்சொற்பொருள்:

உறுதி = பலம்

நித்தம் **நிதம்** = நாள் தோறும்

பொருள் = செல்வம்

பேணுவையேல் = கடை பிடித்தால்

வாழ்வு = வாழ்க்கை

நீண்ட ஆயுள் = அதிக வாழ்நாள்

சுத்தமுள்ள = தூய்மையான

இன்பம் = மகிழ்ச்சி

காலன் = இயமன்

நன்னீரும் = நல்ல குடிநீரும்

உலகில் = வையத்தில்

@KTBS
NOT TO BE REPUBLISHED

படிக்க :-

உடலின் உறுதி
உலகில் இன்பம்
இடமும் பொருளும்
இனியவாழ்வு
காலை மாலை
காலைத் தொட்டுக் கும்பிட்டு
காலன் ஓடிப்போவான்.

பயிற்சி

அ. வினாக்களுக்கு விடையளிக்கவும் :-

1. உலகில் இன்பமாக யார் வாழ்வார்கள் ?

____

2. எது இனிய வாழ்வு தராது ?

3. எங்கு சுகமுண்டு ?

4. நீண்ட ஆயுள் எப்படிப் பெற முடியும் ?

5. யாருடையக் காலைத் தொட்டுக் கும்பிட்டு காலன் ஓடிப் போவான் ?

6. எவை நூறு வயது தரும் ?

@KTBS NOT TO BE REPUBLISHED

ஆ. கோடிட்ட இடங்களை நிரப்புக : -

1. உடலின் உறுதி உடையவர்கள் .... இன்பம் உடையவராம்.
2. இடமும் பொருளும் நோயாளிக்கு .... வாழ்வு தந்திடுமோ.
3. காலை மாலை உலவி நிதம் காற்று வாங்கி வருவோரின் .... தொட்டுக் கும்பிட்டு காலன் ஓடிப்போவான்
4. சுத்தமுள்ள இடமெங்கும் .... உண்டு
5. நோயை ஓட்டி விடுமப்பா .... வயதும் தருமப்பா.

இ. பிரித்தெழுதுக : -

1. இடமெங்கும் = ...

2. **சுத்தமுள்ள** = ...

3. காலைத்தொட்டு = ...

4. நன்னீர் = ...

5. ஓடிப்போவானே = ...

ஈ. எதிர்ச்சொல் தருக.

காலை x ....

உறுதி x ....

நீண்ட x ....

தூய x ....

நன்னீரும் x ....

உ. மாறியுள்ள எழுத்துகளை வரிசைப் படுத்தி எழுதுக.

1.	ண	க	வ	க்	ம்		
2.	ரு	ங்	வா	க	ள்		
3.	கா	உ	ட்	ரு	ள்	க	ங்
4.	றி	ன்	ந				
5.	மா	ம்	ம்	ப	ழ		

@KTBS
NOT TO BE REPUBLISHED

சொல்லுவோம் எழுதுவோம்

நான் → எழுதுவேன் 1. நான் எழுதுவேன்

நான் → விளையாடுவேன் 2 ....

நான் → படிப்பேன் 3 ....

நான் → வணங்குவேன் 4 ....

நான் → ஓடுவேன் 5 ....

நாங்கள்	→ எழுதுவோம்	1. நாங்கள் எழுதுவோம்
	→ விளையாடுவோம்	2 ....
	→ படிப்போம்	3 ....
	→ வணங்குவோம்	4 ....
	→ ஓடுவோம்	5 ....

ஊ. சரியான சொல்லை கோடிட்ட இடத்தில் நிரப்புக.

1. கோழிக்கு .... போடு (இரை, இறை)
2. நாய் போல .... (குறை, குரை)
3. கடிதத்தை .... யில்போடு (உறை, உரை)
4. தோட்டத்தில் பூவைப் .... (பறி, பரி)
5. வரிசை .... உட்கார் (மாறி, மாரி)

கற்க கசடற

©KTBS NOT TO BE REPUBLISHED

பாடிப் பழகுக :

இனிய தமிழைப் பாடுவேன்

இனிய தமிழைப் பாடுவேன்
இன்பத் தமிழைப் பாடுவேன் !
கனியக் கனியப் பாடுவேன்
காலை மாலை பாடுவேன் !

தந்தை அன்பைப் பாடுவேன்
தாயை வணங்கிப் பாடுவேன் !
எந்த நாளும் பாடுவேன்
எங்கள் தமிழைப் பாடுவேன் !

-படைக்களப் பாவலர் மூர்த்தி
(உயர்ந்த உள்ளம்)

NOTE

@KTBS
NOT TO BE REPUBLISHED

NOTE

@KTBS
NOT TO BE REPUBLISHED